DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :DW -1

| | | |
|---|---|---|
| Name | : மனோகரன் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 28th day of April 2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது பையேகெமிஸ்ட்டிரி பிரிவில் துறை தலைவராக அண்ணாமலை பல்கலைகழகம், சிதம்பரத்தில் பணிபுரிந்து வருகிறேன். பதிவாளருக்கு அழைப்பாணை அனுப்பப்ட்டுள்ளது. அவர் எனக்கு சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கியதால் நான் நீதிமன்றம் வந்தேன். அந்த அனுமதி கடிதம் ச.சா.ஆ.1. ராஜலிங்கம், த.பெ.காசிநாதன் என்பரது வருகைபதிவேட்டை எடுத்துவந்து சாட்சியம் அளிக்கும்படி பதிவாளருக்கு அழைப்பாணை அனுப்பட்டது. மேற்படி ராஜலிங்கம் எங்கள் கல்லூரியில் எந்த வருடம் சேர்ந்தார் என்று எனக்கு சரியாக நினைவில்லை. ராஜலிங்கம் சேர்ந்திருந்தது இரண்டு வருட படிப்பு. ராஜலிங்கம் கல்லூரில் சேர்ந்தது எனக்கு தெரியாது. அவரது முதலாம் ஆண்டு படிப்பு என்று முடிந்தது என்றும் எனக்கு தெரியாது. இரண்டாம் ஆண்டு எப்போது ஆரம்பித்து எப்போது முடிகிறது என்று எனக்கு தெரியாது.

எங்கள் பல்கலைகழகத்தில் வருகை பதிவேடு ஆவணங்கள் எத்தனை வருடங்கள் பராமரிக்கவேண்டும், அது எத்தனை வருடத்திற்கு பின்பு அழிக்கப்படவேண்டும் என்று விதி உள்ளது என்று எனக்கு தெரியாது. அவ்வாறு ஒரு விதி உள்ளதா என்று எனக்கு தெரியாது.

ராஜலிங்கத்திற்கு வழிகாட்டி யார் என்று எனக்கு தெரியும். அவர் பெயர் முனைவர் சுரேஷ். முனைவர் சுரேஷ் பல்கலைகழகத்தில் 2002 வருடம் பணியில் சேர்ந்தார். தற்போது வரை அவர் பணியில் உள்ளார். ராஜலிங்கத்தின் வருகைபதிவேடு எந்த வருடம் அழிக்கப்பட்டதா இல்லையா என்று எனக்கு தெரியாது. முனைவர் சுரேஷை விசாரித்து வருகைபதிவேடு பற்றி நான் தெரிந்துகொள்ளவில்லை. பொதுவாக பி.எச்டி படிப்பவர்கள் எப்போது கல்லூரிக்கு வருவார்கள் என்பது வழிகாட்டிக்கு தெரியும்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு பதிவாளர் கொடுத்த சான்றிதழில் மே மாதம் மற்றும் ஜீன்மாதம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கோடை விடுமுறை என்பதால் அந்த காலகட்டத்தில் வருகை பதிவேடு பராமரிப்பதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அந்த சான்றிதழ் அ.சா.ஆ.101. முனைவர் பட்டத்திற்கு படிப்பவர்கள் தினந்தோறும் கல்லூரியில் வகுப்பு எடுக்கப்படுவதில்லை. அவர்கள் ஆராய்ச்சி மேற்கொள்வார்கள். அவர்களுக்கு எந்த பாடம் ஒதுக்கப்பட்டுள்ளதோ அது குறித்து அவர்கள் புத்தங்களை படித்து கட்டுரைகள் தாயார் செய்வார்கள். அதில் எதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் வழிகாட்டியிடம் விவாதிப்பார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.